இயேசு வாழ்கிறார் ஊழியங்கள்

# இயேசுவை தினம் பார்க்கிறேன்

VOL 23 ISSUE 05 MAY-2023

ஆண்டு சந்தா 100/- தனிப்பிரிதி 10/-





இயேசுவை தினம் பார்க்கிறேன் மாதப் பத்திரிகை இப்பொழுது Digital முறையில் நம்முடைய இணையதளத்திலும்

WWW.JESUSLIVES.IN

jesuslives.in

# ஆசிரியர் மடல்

ஆண்டவரும் உலக இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். தேவனுடைய பெரிதான கிருபையினால் இந்த மாத இதழ் வாயிலாக உங்களைச் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். ஏசாயா 25:5-ல் வறட்சியான இடத்தின் காங்கை மேகத்தினால் தணிவதுபோல், அந்நியரின் மும்முரத்தைத் தணியப்பண்ணுவீர். மேகத்தின் நிழலினால் வெயில் தணிகிறதுபோல் பெலவந்தரின் ஆரவாரம் தணியும். இந்த வெயில் காலத்தில், கோடை காலத்தில், கொள்ளைநோய் காலத்தில் ஒதுங்கும், பாதுகாக்கும் நிழலுமானீர் என்ற வார்த்தையின்படி இந்த நாட்களில் தேவன் நம்மைப் பாதுகாத்து நடத்துவாராக. செட்டையின் கீழ் மூடிக்கொள்வாராக. கடந்த நாட்களில் நடைபெற்ற எல்லாக் கூட்டங்களையும் கர்த்தர் அளவில்லாமல் ஆசீர்வதித்தார். குறிப்பாக வானத்தின் வாசல் எழுப்புதல் ஜெபமையத்தில் வைத்து இரண்டாவது வெள்ளிக்கிழமை மற்றும் இரண்டாவது சனிக்கிழமைகளில் நடைபெறுகிற உபவாச ஜெபங்களை தேவன் அளவில்லாமல் ஆசீர்வதித்து, வழிநடத்தி வருகிறார். அதேபோல வெளியூர் கூட்டங்களிலும் தேவன் அநேகரை ஆசீர்வதிக்கவும், இன்னும் நாம் தேவன் எதிர்பார்க்கிற அளவுக்கு அவருடைய நாமத்தை உயர்த்தவும், மகிமைப்படுத்தவும் ஜெபிக்க வேண்டும். மே மாதத்தில் பல இடங்களில் சுவிசேஷ கூட்டங்களும், எழுப்புதல் கூட்டங்களும் நடைபெற உள்ளது. இந்த கூட்டங்களில் எல்லாம் தேவ நாமம் மகிமைப்படவும், ஜனங்கள் இயேசுவை அறியவும் ஜெபித்துக் கொள்ளுங்கள். நமது வானத்தின் வாசல் எழுப்புதல் ஜெபமையம் ஆரம்பித்து 23 ஆண்டுகள் ஆகிறது. தேவன் இந்த ஜெபமையத்தின் மூலம் மகிமையான காரியங்களைச் செய்தார், செய்து கொண்டிருக்கிறார். மேமாதம் 1-ஆம் தேதி காலை 9 மணி முதல் மதியம் 2 மணி வரை 23-ஆம் ஆண்டு ஸ்தோத்திரக் கூட்டம் நடைபெறும். இந்த கூட்டத்தில் நீங்கள் யாவரும் குடும்பமாக கலந்து கொண்டு தேவ ஆசீர்வாதத்தை பெற்றுச் செல்ல அன்புடன் அழைக்கிறோம். வாருங்கள் நாம் இணைந்து தேவனுடைய நாமத்தை உயர்த்தி மகிமைப்படுத்துவோம். தொடர்ந்து நம்முடைய எல்லா ஊழியங்களுக்காகவும், அலுவலக உதவியாளர்களுக்காகவும், ஊழியத்தின் தேவைகளுக்காகவும் கருத்தாய் ஜெபிக்கும்படி இயேசுவின் நாமத்தில் கேட்டுக் கொள்ளுகிறேன். இயேசு கிறிஸ்துவின் மாறாத கிருபை நம் அனைவரோடும் இருப்பதாக.



*இயேசுவின் பணியில்,*

(சகோ. L. வின்சென்ட்ராஜ்)

jesuslives.in

# நீங்களும் பூரண சற்குணராயிருங்கள்



சகோ. L. வின்சென்ட்ராஜ்

ஆண்டவரும் உலக இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். தேவனுடைய பெரிதான கிருபையினால் இந்த செய்தியின் வாயிலாக உங்களைச் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா, நம்முடைய தேவன் பூரண சற்குணராயிருக்கிறது போல, நீங்களும் நிறைவாக, பூரணராக இருக்க வேண்டும் என்று விரும்புகிறார். இது தான் இயேசுவின் விருப்பம், இது தான் தேவனுடைய விருப்பம். நீங்கள் திராணி அற்றவர்களாகவோ, பலவீனமுள்ளவர்களாகவோ, குறைவு உள்ளவர்களாகவோ இருப்பதை தேவன் விரும்பவில்லை. அவர் எல்லா நிறைவுள்ளவராக, சகல பரிபூரணத்தோடும் இருக்கிறார். கொலோ 2:9-ல் ஏனென்றால் தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் சரீரப்பிரகாரமாக அவருக்குள் வாசமாயிருக்கிறது, நிறைந்திருக்கிறது என்று சொல்லப்பட்டுள்ளது. கொலோ 1:19-ல் சகல பரிபூரணமும் அவருக்குள் வாசமாயிருக்கிறது என்றார். அவருக்குள் எல்லாம் நிறைந்திருக்கிறது, அவர் சம்பூரணமுள்ளவர். அதனால் தான் நாம் ஜெபிக்கும் போது ஆம் என்று சொல்லி நம்மை ஆசீர்வதிக்கிறார். இன்றைக்கு அவரை பின்பற்றுகிற நாம் அவரைப் போலவும், அவருடைய பிள்ளைகளாகிய நாம் பரிபூரணப்படவும், நிறைவாக இருக்கவும் விரும்புகிறார். ஆனால் நாமோ முப்பதும், அறுபதும் இருந்தால் போதும் பரிபூரணமெல்லாம் தேவையில்லை, அன்றன்றைக்குத் தேவை சந்திக்கப்பட்டால் போதும் என்று நினைக்கிறோம். எலிசா தீர்க்கதரிசியின் நாட்களில் இஸ்ரவேலில் யோவாஸ் என்ற ஒரு ராஜா இருந்தான். எலிசா அவனைப் பார்த்து, உன் எதிரியின் மேல்



jesuslives.in

அம்புகளை எய்யும், அது தேவனுடைய இரட்சிப்பின் அம்பு என்று சொல்லி எய்து கொண்டே இருக்கச் சொன்னான். ஆனால் யோவாஸ் ராஜாவோ மூன்று முறை மட்டுமே எய்து விட்டு திருப்தியடைந்து அப்படியே நின்று விட்டான். எலிசா சொன்னார் நீர் ஐந்து, ஆறு முறையாவது உன் எதிரியை விரட்டியடித்திருக்க வேண்டும். மூன்று முறை மட்டும் அடித்து விட்டு திருப்தியடைந்து விட்டாய், ஆகவே திரும்ப திரும்ப உன் எதிரியின் மேல் நீ படையெடுக்க வேண்டும், சண்டை போட வேண்டும். காரணம் நீ முன்னேறாமல், பரிபூரணமடையாமல் திருப்தியாகி போதும் என்று உன்னிலே திருப்திப்பட்டுக் கொண்டு நிறைவடையாமல் போனாய் என்றார். இன்றைக்குத் தேவ பிள்ளைகள் தேவன் எதிர்பார்க்கும் நிறைவை, பரிபூரணத்தை அடையாமல், தங்களில் தாங்களே திருப்திப்பட்டுக் கொண்டு, சந்தோஷப்பட்டுக் கொண்டு, முழங்கால் அளவு தண்ணீர் போதும், இடுப்பளவு தண்ணீர் போதும் என்று இருந்து விடுகிறோம். தண்ணீரில் நிற்கிறோம் ஆனால் நீந்த மாட்டோம். கடக்க முடியாத தலைக்கு மேல் தண்ணீர் போனால் தானே நீந்த முடியும். அதே போல் தான் நம்முடைய ஜெப ஜீவியத்திலும், ஊழியப் பாதையிலும், உலக வேலைகளில், ஆசீர்வாதங்களில் தன்னில் தானே நாம் சந்தோஷப்பட்டு திருப்தியடைந்து தேவனுடைய ஆசீர்வாதங்களை மூடி வைத்து விடுகிறோம். நாம் செய்கிற ஒவ்வொரு காரியங்களிலும், ஜெபத்திலும், ஊழியத்திலும், தேவனுடைய காரியங்களிலும் நாமாகவே திருப்திப்பட்டுக் கொண்டு சந்தோஷப்படக்கூடாது. தேவன் நம்மில் சந்தோஷப்பட வேண்டும், அவர் நம்மில்



திருப்தியடைய வேண்டும். இதைத்தான் அவர் மத் 25:21-ல் சொல்லுகிறார் அவனுடைய எஜமான் அவனை நோக்கி, நல்லது, உத்தமமும், உண்மையுமுள்ள ஊழியக்காரனே, கொஞ்சத்திலே உண்மையாயிருந்தாய், அநேகத்தின் மேல் உன்னை அதிகாரியாக வைப்பேன் என்றார். இந்த செய்தியை வாசித்துக் கொண்டிருக்கும் என் அன்பு சகோதர, சகோதரிகளே இன்றைக்கு நாம் எப்படியிருக்கிறோம்? நிறைவோடு இருக்கிறோமா? சம்பூரண ஆசீர்வாதத்தோடு தேவனை பின்பற்றுகிறோமா அல்லது குறைவுகளோடு, வேதனைகளோடு வாழுகின்றோமா? நம்முடைய இந்த நிலையை தேவன் மாற்ற விரும்புகிறார். உங்கள் குறைவை தேவன் நிறைவாக்க விரும்புகிறார். இயேசு சொன்னார் யோவான் 10:10-ல் நானோ என் ஆடுகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அவைகள் பரிபூரணப்படவும் வந்தேன் என்றார். ஆம் நீங்கள் பரிபூரணப்பட வேண்டும், நீங்கள் சகலவற்றிலும் நிறைந்து காணப்பட வேண்டும். இதற்கு தான் இயேசு இந்த பூமிக்கு இறங்கி வந்தார். யோவான் 1:14-ல் அவர் கிருபையினாலும், சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம் பண்ணினார். வசனம் 16-ல் அவருடைய பரிபூரணத்தினால் நாம் எல்லாரும் கிருபையின் மேல் கிருபையைப் பெற்றோம். அவர் நிறைவாய் இருப்பது போல இன்றைக்கு உங்களையும் நிறைவாக மாற்றி சம்பூரணப்படுத்துவார். பூரண சற்குணராக மாற்றுவார். ஆகவே தான் வேதம் சொல்லுகிறது நீதி 28:20-ல் உண்மையுள்ள மனுஷன் பரிபூரண ஆசீர்வாதங்களைப் பெறுவான். அந்த பரிபூரண ஆசீர்வாதங்களுக்கு நேராக தேவன் உங்களையும், உங்கள் குடும்பத்தையும் ஆசீர்வதித்து நடத்துவாராக. பூரணத்திற்கு நேராக உங்களை வழிநடத்துவாராக. யாக் 1:4-ல் நீங்கள் ஒன்றிலும் குறைவுள்ளவர்களாயிராமல், பூரணராயும், நிறைவுள்ளவர்களாயும் இருங்கள் என்ற வார்த்தையின்படி என் ஆண்டவராகிய தேவன் தாமே உங்களை ஆசீர்வதித்து நடத்துவாராக. போகட்டும் எதில் பூரணம், எதில் சம்பூரணம் அடைய வேண்டும் என்பதைப் பார்போம்.

# இரட்சிப்பில் பூரணம்

பூரண இரட்சிப்பு, ஞானம், அறிவு உன் காலங்களுடைய உறுதியாயிருக்கும். உலகத்திலே முதன்மையானதும், மேன்மையானதும் ஒரு மனிதனுடைய இரட்சிப்பு மாத்திரமே. எவ்வளவு பெரிய மனிதனாக இருந்தாலும், நாட்டை ஆள்பவராக இருந்தாலும், உலகத்தில் கொடி கட்டிப் பறந்தாலும் தேவனுடைய இரட்சிப்பை, பாவமன்னிப்பை, கிருபையை பெறவில்லை என்றால் அவர் வாழ்க்கை ஜீரோ தான், (0 தான்). அதை இயேசுவே சொல்லியிருக்கிறார் மத் 16:26-ல் மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக் கொண்டாலும், தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன? மனுஷன் தன் ஜீவனுக்கு ஈடாக என்னத்தைக் கொடுப்பான்? என்றார். உலகம் முழுவதும் ஆதாயப்ப-த்தினாலும், உலக-த்திற்கு அதிபதியாக இருந்தாலும், அவர் மனம்திரும்பி, பாவமன்னிப்பைப் பெற்று, இயேசு தருகிற இரட்சிப்பைப் பெறவில்லை என்றால், அவர் பூமிக்குரியவர் தான் பரலோகவாசி அல்ல. இந்த பூமியில் வேண்டுமானால் கொடி கட்டி பறக்கலாம், ஆனால் பரலோகத்தில் பிரவேசிக்க முடியாது. இரட்சிப்பு எவ்வளவு விலையேறப் பெற்றது, மதிப்புக்குரியது. வேதாகமத்தில் மதிப்புக்குரிய ஒரு போதகர், ஊழியக்காரர் ஒருவர் இருந்தார். அவர் இஸ்ரவேலில் பிரசித்திப் பெற்ற போதகர். அவர் இரவிலே வந்து யாருக்கும் தெரியாமல் இயேசுவை சந்தித்துப் போவார். இயேசு அவரைப் பார்த்து நீ மறுபடியும் பிறக்க வேண்டும், அதாவது நீ இரட்சிக்கப்பட வேண்டும் என்றார். அவரோ நான் தாயின் வயிற்றிலே ஒருமுறை பிறந்து விட்டேன், இனி ஏன் மறுபடி பிறக்க வேண்டும் என்றார். அப்பொழுது இயேசு சொன்னார் யோவான் 3:5-ல் ஒருவன் ஜலத்தினாலும், ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்க மாட்டான் என்றார். அவர் போதகர் தான், வேதத்தை அறிந்தவர் தான், ஊழியக்காரர் தான் ஆனால் இரட்சிக்கப்படவில்லை, இரட்சிப்பின் பரிபூரணத்தைப் பெறவில்லை. ஏன் ஒருமுறை பிறந்தால் போதாதா? ஆலயத்திற்குப் போனால் போதாதா? வேதாகமத்தைத் தூக்கினால் போதாதா? ஏன்? மறுபடியும் பிறக்க வேண்டும். மாம்சத்தில் பிறப்பது மாம்சமாயிருக்கும், ஆவியினால் பிறப்பது ஆவியாயிருக்கும் என்றார். போதகனாயிருந்தும், ஊழியக்காரனாயிருந்தும் இரட்சிக்கப்படவில்லை, பாவமன்னிப்பின் நிச்சயத்தைப் பெறவில்லை. இயேசுவை அறிவிலே அறிந்திருந்தான், ஆனால் அனுபவத்திலே அறியவில்லை. ஆகவே தான் இயேசு சொன்னார் மத் 24:13-ல் முடிவுபரியந்தம் நிலைநிற்பவனே இரட்சிக்கப் படுவான் என்றார். இரட்சிப்பு என்பது ஏதோ ஒரே நாளில் நடந்து விடுவது அல்ல, நாம் ஒவ்வொரு நாளும் நம்மை தேவனுக்கு முன்பாக அர்ப்பணித்து அவர் சாயலாக மாறி, அவருடைய ஆலயமாக, அவரை சுமக்கிற பாக்கியத்தைப் பெற வேண்டும். அப்படிச் செய்யும் போது தான் ரோமர் 12:2-ல் சொல்லப்பட்டுள்ள வார்த்தையின்படி நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும், பிரியமும், பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகு-த்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகுகிறதினாலே மறுரூபமாகுங்கள் என்றார். ஆம் நம்முடைய மனம் ஒவ்வொரு நாளும் புதிதாக வேண்டும், நம்முடைய உள்ளான மனிதனில் குணப்பட வேண்டும், பெலனடைய வேண்டும்.



தேவன் விரும்புகிற மாற்றம், பரிசுத்தம் நமக்குள் வரவேண்டும். இந்த இரட்சிப்பில் பூரணப்பட வேண்டும். இதைத்தான் இயேசு இந்த பூமியிலே நிறைவேற்றினார். **எபி 2:10-ல் அவர்களுடைய இரட்சிப்பின் அதிபதியை உபத்திரவங்களினாலே பூரணப்படுத்துகிறது அவருக்கேற்றதாயிருந்தது. மட்டுமல்ல எபி 5:8,9-ல் அவர் குமாரனாயிருந்தும் பட்டபாடுகளினாலே கீழ்ப்படிதலைக் கற்றுக் கொண்டு, தாம் பூரணரான பின்பு, தமக்குக் கீழ்ப்படிகிற யாவரும் நித்திய இரட்சிப்பை அடைவதற்குக் காரணமானார்.** ஆம் ஆண்டவராகிய இயேசு இந்த பூமியிலே எதையும் அவசர அவசரமாக, அரையும் குறையுமாக செய்யவில்லை எல்லாவற்றையும் நேர்த்தியாகவும், பூரணமாகவும் செய்து முடித்தார்.

என்னுடைய நண்பர் ஒருவர் மருத்துவராக இருக்கிறார். அவர் எப்பொழுதும் வேதாகமத்திற்கு விரோதமாகவே பேசுவார். ஆண்டவராகிய தேவன் விண்ணையும் மண்ணையும் படைத்து, கடைசியில் அவசர, அவசரமாக மனிதனைப் படைத்தார். அதனால் தான் அவனுக்கு வியாதியும், பெலவீனமும் வருகிறது என்று வாக்குவாதம் செய்வார். அப்படியல்ல தேவன் சகலத்தையும் நேர்த்தியாக, செவ்வையாக செய்து முடித்தார். இதுதான் படைப்பின் பூரணம், இரட்சிப்பின் பூரணம். இதை செய்யத்தான் அவர் சிலுவையில் சாவை ஏற்றார்.


நாம் இரட்சிப்பிலே சம்பூரணமடையவும், பரிபூரணப்படவும் நமக்காக அடிக்கப்பட்டார், தண்டிக்கப்பட்டார். இன்றைக்கு அந்த தேவனை நாம் அவரை அறிய வேண்டிய விதத்தில் அறிந்து, தெரிய வேண்டிய விதத்தில் தெரிந்து இரட்சிப்பிலே பூரணமடைய வேண்டும். அப்போது தான் பரலோகவாசியாக நித்திய ஜீவனை அடையவும், சுதந்தரிக்கவும் முடியும். அவருடைய இரட்சிப்பிலே பூரணமடைய வேண்டும் என்ற ஆண்டவராகிய தேவன் தாமே உங்களை இரட்சிப்பிலே பூரணப்படுத்துவாராக!.



# ஞானத்தில் பூரணம்

பூரண இரட்சிப்பும், பூரண ஞானமும், அறிவும் உன் காலங்களுடைய உறுதியாயிருக்கும், கர்த்தருக்குப் பயப்படுதலே அதின் பொக்கிஷம். ஏசாயா 33:6. அடுத்ததாக நாம் பூரண ஞானத்தில் நிறைய வேண்டும். இன்றைக்கு நாம் வாழ்கிற உலகம், பொல்லாத உலகம், பொல்லாத சிந்தனையாளர்கள், தந்திரமானவர் நிறைந்தது. யாரை எப்படி பேசி, எப்படி மடக்குவது போன்ற சாதுரிய உலகத்தின் ஞானத்தால், அநேகரை பிசாசு நிறைத்து, அவர்களை அலைக்கழிக்கிறான். இப்படிப்பட்ட உலகத்தில் வாழ்கின்ற நாம் நம்முடைய காரியங்களை செய்ய ஞானம் வேண்டும். படிக்கும் ஞானம் அல்ல, திறமையின் ஞானம் அல்ல, பரத்திலிருந்து வருகிற ஞானம் வேண்டும். யாக் 3:17-ல் பரத்திலிருந்து வருகிற ஞானமோ, முதலாவது சுத்தமுள்ளதாயும், பின்பு சமாதானமும், சாந்தமும், இணக்க முள்ளதாகவும், இரக்கத்தாலும், நற்கனிகளாலும் நிறைந்ததாயும், பட்சபாதமில்லாததாயும், மாயமற்றதாயுமிருக்கிறது என்றார். இவ்வுலகத்தின் ஞானம் வேறு, தேவனுடைய ஞானம் வேறு. அப்போஸ்தலனாகிய பவுல் எழுதுகிறார் 1 கொரி 2:6,7-ல் அப்படியிருந்தும், தேறினவர்களுக்குள்ளே ஞானத்தைப் பேசுகிறோம், இப்பிரபஞ்சத்தின் ஞானத்தையல்ல, அழிந்து போகிறவர்களாகிய இப்பிரபஞ்சத்தின் பிரபுக்களுடைய ஞானத்தையல்ல உலகத்தோற்றத்திற்கு முன்னே தேவன் நம்முடைய மகிமைக்காக ஏற்படுத்தினதும், மறைக்கப்பட்டதுமாயிருந்த இரகசியமான தேவ ஞானத்தையே பேசுகிறோம் என்றார். உலக ஞானம் எதற்கும் உதவாது. தமிழில் பழமொழியில்

சொல்வார்கள் ஏட்டுச் சுரக்காய் கறிக்கு உதவாது, அதேபோல் தான் உலக ஞானத்தை வைத்து, அறிவை வைத்து நம் தேவனை அறியவோ, பிசாசை மேற்க்கொள்ளவோ முடியாது. பரத்திலிருந்து வருகிற ஞானம் வேண்டும். அதுதான் சுத்தமுள்ளதாயும், பரிசுத்தமுள்ளதாயும் நம்மை தேவனோடு இணைக்கிறதாகவும் இருக்கிறது. இந்த ஞானத்தை தேவன் அவருடைய பிள்ளைகளுக்கு கொடுத்து பரிபூரணப்படுத்த விரும்புகிறார். லூக்கா 21:15-ல் உங்களை விரோதிக்கிறவர்கள் ஒருவரும் எதிர் பேசவும், எதிர் நிற்கவும் கூடாத வாக்கையும் ஞானத்தையும் நான் உங்களுக்குக் கொடுப்பேன் என்றார். தேவன் அவருடைய பிள்ளைகளுக்கு இந்த ஞானத்தை கொடுக்க விரும்புகிறார். அதிலே அவர்கள் நிறைவடையவும், பரிபூரணப்படவும் விரும்புகிறார். இதைத்தான் சாலமோனுக்கு இராஜ்யம் செய்ய கொடுத்தார். ஆனால் சாலமோன் அதை விருத்தி செய்து கொள்ளாமல், தேவன் கொடுத்த ஞானத்தை தேவனுக்காக பயன்படுத்துவதைப் பார்க்கிலும், தனக்காக, தன் சுயநலத்திற்காக பயன்படுத்திக் கொண்டார். அந்த தேவ ஞானத்தை உலக ஞானத்தோடு கலப்படமாக்கிக் கொண்டார். அவ்வளவு பெரிய தேவாலயத்தைக் கட்டி, தேவனால் பாராட்டைப் பெற்ற அந்த ராஜா, தன் ஆத்துமாவை அடக்கி அமரப் பண்ணாமல் எகிப்திய பெண்கள் மேல் மோகம் வைத்து, தேவனை விட்டு விலகிப் போனார். அவருடைய ஞானம் குப்பையானது. தேவ ஞானத்திலே வளரவில்லை, பரிபூரணப்படவில்லை. இம்மைக்காக, உலகத்திற்காக பயன்படுத்தி அதிலே பரிபூரணப்படவில்லை. ஆகவே சாலமோன் அந்த ஞானத்திலே நிலைத்து நிற்கவில்லை. ஆனால் யோசேப்பை பாருங்கள்




பாடுகளிலே, உபத்திரவத்திலே, வேதனையிலே தேவனுக்குள் நிலைத்திருந்தார். அவர் சிறைச்சாலையில் இருக்கும் போது தேவனோடு சஞ்சரித்து, பரிசுத்த ஆவியில் நிரம்பி உலகத்தினால் கறைபடாதபடிக்குத் தன்னைக் காத்துக் கொண்டார் ஆதி 41:38-ல் பார்வோன் தன் ஊழியக்காரரை நோக்கி, தேவ ஆவியைப் பெற்ற, ஞானமுள்ள இந்த மனுஷனைப் போல வேறொருவன் எனக்கு கிடைக்க கூடுமோ என்றான். பார்வோன் யோசேப்பை எகிப்து தேசமனைத்திற்கும் அதிகாரியாக்கினான். யோசேப்பு தேசமனைத்திற்கும் தேவ ஞானத்தைப் போதித்து பஞ்சத்திலே ஜனங்களைப் பாதுகாத்தார். காரணம் ஞானத்திலே பூரணமடைந்தார். அந்த ஞானத்தை இந்த கடைசி காலத்தில், பொல்லாத உலகத்தில் வாழ்கிற நமக்கு தேவன் தர விரும்புகிறார். அதிலே நம்மை பூரணப்படுத்த விரும்புகிறார். அவர் பூரணசற்குணராய் இருப்பது போல நீங்களும் பூரணசற்குணராய், நிறையுள்ளவர்களாய் இருங்கள் என்றார். இன்றைக்கு இந்த ஞானத்தை நீங்கள் தேவனிடத்தில் கேளுங்கள், அதிலே சிறந்து விளங்க தேவன் உங்களுக்கு கிருபை செய்வார். யாக் 1:5-ல் உங்களில் ஒருவன் ஞானத்தில் குறையுள்ளவனாயிருந்தால், யாவருக்கும் சம்பூரணமாய் கொடுக்கிறவரும், ஒருவரையும் கடிந்து கொள்ளாதவருமாகிய தேவனிடத்தில் கேட்கக்கடவான். அப்பொழுது அவனுக்குக் கொடுக்கப்படும் என் ஆண்டவராகிய தேவன் தாமே அவருடைய ஞானத்திலே பூரணப்படுத்தி அவருக்கு மகிமையாக மாற்றுவாராக!.

# பூரண ஆயுசு நாட்கள்

இதற்குப்பின் யோபு நூற்றுநாற்பது வருஷம் உயிரோடிருந்து, நாலு தலைமுறையாகத் தன் பிள்ளைகளையும், தன் பிள்ளைகளுடைய பிள்ளைகளையும் கண்டான். யோபு நெடுநாளிருந்து, பூரண வயதுள்ளவனாய் மரித்தான். யோபு 42:16,17. அடுத்து மனிதனுடைய வாழ்க்கையில், ஆயுசு நாட்களில் சுகத்திலும், பெலத்திலும் பூரணமுள்ளவனாக வாழ தேவன் விரும்கிறார். நாம் இந்த பூமியிலே நல்ல சுகத்தோடு, பெலத்தோடு, ஆரோக்கியத்தோடு ஜீவிக்க தேவன் விரும்புகிறார். சங் 35:27—ல் தம்முடைய ஊழியக்காரனுடைய சுகத்தை விரும்புகிற கர்த்தருக்கு மகிமை உண்டாவதாக என்று சொல்லப்பட்டுளளது. நீங்கள் நல்ல சுகத்தோடு அவருக்கு மகிமையாக வாழ, அவருடைய வேலையைச் செய்ய தேவன், இந்த ஜீவனை நமக்குக் கொடுத்திருக்கிறார். அவர் நமக்கு பரிகாரி, அவர் நம்மை சுகமாக்குகிற தேவன். எகிப்தியருக்கு வரப்பண்ணின வியாதிகளில் ஒன்றையும் உங்களுக்கு வரப்பண்ணேன் என்றார் யாத் 15:26-ல் அப்படிச் சொல்லப்பட்டுள்ளது. யோபுவின் வாழ்க்கையைப் பாருங்கள் கர்த்தரை நேசித்தவரும், கர்த்தரை உத்தமமாய் பின்பற்றின அவரைப் போல வேறு ஒருவரும் இல்லை.

அப்படிப்பட்ட மனிதனுக்கு பயங்கரமான இழப்புகளும், பாடுகளும், வேதனைகளும் வந்தது. இனிப்பிழைப்பார், இந்த பூமியில் திரும்பி வாழ்வார் என்று யாரும் எதிர்பார்க்கவில்லை. அப்படிப்பட்ட பாடுகள், வேதனையில் என்ன வந்தாலும், எது நடந்தாலும், யார் கைவிட்டாலும், நான் தேவனை விட்டு பின் வாங்கமாடடேன் அவர் என்னைக் கொன்று போட்டாலும், அவர் மேல் நம்பிக்கையாயிருப்பேன். யோபு 13:15 அப்படிச் சொல்லுகிறது. அப்படிப்பட்ட நிலையிலும் விசுவாச அறிக்கை செய்தார். என் மீட்பர் உயிரோடிருக்கிறார் என்றார். யோபு 19:25. நான் போகும் பாதையை அவர் அறிவார், அவர் என்னை சோதித்த பின் பொன்னாக விளங்குவேன் என்றார். அவ்வளவு பாடுகள் வேதனையில் கடந்து போன யோபு கர்த்தரால் சுகம் பெற்று, பெலன் பெற்று அதற்கு பிறகு 140 வருஷம் உயிரோடு இருந்து சுகத்தையும், பெலத்தையும் பெற்றான். பூரண ஆயுசு உள்ளவராக இருந்தாராம். அவருடைய பாடுகளும் வேதனைகளும் ஒரு சில மாதங்களும், ஒரு சில நாட்களும் தான். அதன் பிறகு பெலன், சுகம் தான். அவருடைய நாட்கள் மேன்மையாக இருந்தது. வேதம் சொல்லுகிறது நாம் இந்த பூமியிலே எவ்வளவு நாட்கள் வாழ்கிறோமோ அவ்வளவு நாட்கள் நமக்கு பெலனும், சுகமும் இருக்கும். உபா 33:25-ல் உன் நாட்களுக்குத்தக்கதாய் உன் பெலன் இருக்கும்.





jesuslives.in

இந்த பூமியில் துன்மார்க்கனுக்கு எப்படியோ, பொல்லாதவனுக்கும் அப்படியே, அப்படியே நீதிமானுக்கும் நடக்கும். பிர 8:14-ல் அதாவது, துன்மார்க்கரின் கிரியைக்கு வருவதுபோல, நீதிமான்களுக்கும் வரும். ஆனால் நீதிமான்கள் எல்லாப் போராட்டத்திலிருந்தும் எழுந்திருப்பார்கள். காரணம் அவனை தேவன் தாங்குகிறார், தப்புவிக்கிறார். இப்படியாகத் தான் தேவன் யோபுவை ஆசீர்வதித்தார். தீர்க்காயுசைக் கொடுத்தார். இதுதான் தேவன் சொன்ன சம்பூரணம். பரிபூரண ஆசீர்வாதம். இந்த ஆசீர்வாதத்தை மனிதர்கள் அனுபவிக்க-த்தான் இயேசு இந்த பூமிக்கு இறங்கி வந்தார். நாம் ஜீவன் பெறவும், பரிபூரணப்படவும் வந்தேன் என்றார். இன்றைக்கு உங்கள் பெலன், உங்கள் சுகம் எப்படி இருக்கிறது. வியாதியோடு, வேதனையோடு உழன்று கொண்டிருக்கிறீர்களா? பெலவீனப்பட்டு ஒடுங்கிப்போய் இதுதான் தேவன் எனக்கு இட்டவழி என்று மனமுடைந்து போனீர்களா? சங்கீதக்காரனாகிய தாவீது அந்த வழியில் கடந்து போன போது என்ன நடந்தது?, எப்படி ஜெபித்தான் என்பதைப் பாருங்கள்.

சங் 102:23,24-ல் வழியிலே என் பெலனை அவர் ஒடுக்கி, என் நாட்களைக் குறுகப்பண்ணினார். அப்பொழுது நான், என் தேவனே, பாதி வயதில் என்னை எடுத்துக் கொள்ளாதேயும், உம்முடைய வருஷங்கள் தலைமுறை தலைமுறையாக இருக்கிறது. நான் ஏன் குறித்த, நியமித்த காலத்திற்கு முன்னே மரிக்க வேண்டும், சாக வேண்டும் என்று ஜெபித்தார். தேவன் நமக்கு நியமித்த காலத்திற்கு முன்னதாக நாம் ஏன் பலவீனப்பட்டு மரிக்க வேண்டும்

பிர 7:17-ல் மிஞ்சின துஷ்டனாயிராதே, அதிக பேதையுமாயிராதே, உன் காலத்துக்கு முன்னே நீ ஏன் சாகவேண்டும். தேவன் இந்த பூமியில் நமக்கென்று காலங்களையும், வருஷங்களையும் வைத்து அவருக்கு மகிமையாக வாழவும், அவருக்காக ஜீவிக்கவும் செய்கிறார். ஆகவே இந்த சரீரத்தைக் குறித்து, இந்த உடலைக் குறித்து நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். இதை குப்பை தொட்டி போல கண்டதையும் சாப்பிட்டு வியாதியை வருவித்துக் கொள்ளாமல், என் சரீரத்தை மாற்றி அமைக்கிறேன் என்று உங்கள் இஷ்டத்திற்கு அறுவை சிகிச்சை செய்ய அதின் மேல் கை வைக்காமல், தேவனை சுமக்கிற ஆலயமாக, அவர் உலாவுகிற இடமாக இந்த சரீரத்தை பரிசுத்தத்தோடு பாதுகாக்க வேண்டும். அதற்குத்தான் தேவன் நம்மை அவருடைய ஆலயமாக விலை கொடுத்து வாங்கியிருக்கிறார். மோசே 120 வயதிலும் பெலத்தோடும், சுகத்தோடும், ஆரோக்கியத்தோடும், சுகமாய் தேவனுக்காக பிரகாசித்து, மகிமையாக பூரண ஆயுசு உள்ளவராக இருந்தார். இன்றைக்கு தேவன், நாம் நீடித்த நாட்களாய் சுகத்தோடு, பெலத்தோடு வாழ விரும்புகிறார்.


சங் 91:16-ல் நீடித்த நாட்களால் அவனைத் திருப்தியாக்கி, என் இரட்சிப்பை அவனுக்குக் காண்பிப்பேன் என்ற வார்த்தையின்படி தேவன் இந்த செய்தியை வாசிக்கின்ற உங்கள் ஒவ்வொருவருக்கும் நல்ல சுகத்தை, பெலத்தை, ஆரோக்கியத்தை தந்து, அவர் பூரண சற்குணராக இருப்பது போல, உங்களையும் பூரணசற்குணராக மாற்றுவாராக!. பூரண ஆயுசு நாட்களைத் தருவாராக!. ஆமென்.





jesuslives.in


செம்பட்டியில்
இயேசுவின்
பாதத்தில்
மே
12
வெள்ளிக்கிழமை
@10:00Am
ஆசீர்வாத
உபவாச ஜெபம்
மே
13
சனிக்கிழமை
@10:00Am
இடம்
வானத்தின் வாசல்,
எழுப்புதல் ஜெப மையம்,
செம்பட்டி, திண்டுக்கல்
Bro.L.Vincentraj
Sis.Kala VincentRaj
மதுரை மாவட்ட அனைத்து திருச்சபைகள் மற்றும் இயேசு வாழ்கிறார் ஊழியங்கள் இணைந்து நடத்தும்
மே
20
சனிக்கிழமை
9:30am to 2:00pm
மதுரையில்
எழுப்புதல்
உபவாச ஜெபம்
Sis.Kala VincentRaj
Bro.L.Vincentraj
இடம்
இயேசு அழைக்கிறார் ஜெபகோபுரம்,
பைபாஸ் ரோடு, பழங்காநத்தம்,
PRC Depot அருகில், மதுரை
தொடர்புக்கு
94428 00449, 94428 00447



# உன்னை சேர்த்துக் கொள்ளுவேன்

சகோதரி. கலா வின்சென்ட்ராஜ்

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் சகோதரிகளுக்கு அன்பின் வாழ்த்துக்கள் ஒரு கிறிஸ்மஸ் நாடகமொன்றை பள்ளிக்கூடத்தில் ஆயத்தம் செய்தார்கள். அந்த வகுப்பில் சரளமாக பேச்சு வராத ஒரு சிறுபையன் இருந்தான். திக்கி திக்கி, கொஞ்ச நேரம் கழித்து தான் வார்த்தைகளைப் பேசமுடியும். அதனால் அவனை இந்த நாடகத்தில் சேர்த்துக் கொள்ளாமல் இருந்தார்கள். இதை அறிந்த அவன் தாய் பள்ளிக்குச் சென்று என் மகனைச் சேர்த்துக் கொள்ளாமல் விலக்கிவிட வேண்டாம். அவனுக்குத் தாழ்வு மனப்பான்மை ஏற்படும். சின்ன பகுதியாவது கொடுங்கள், நான் அவனை எப்படியாவது தயார் செய்து விடுகிறேன் என்றாள். உடனே அவர்களும் அவனை சேர்த்துக் கொண்டு, மரியாளும், யோசேப்பும் சத்திரத்தில் இடம் கேட்டு போகிற போது **இங்கே இடமில்லை** என்ற வார்த்தையை மட்டும் சொல்லும்படியாக அவனுக்கு ஒரு சிறுபகுதியைக் கொடுத்தார்கள். அந்த நாளில் நாடகம் நடைபெறுகிற போது, மரியாளும், யோசேப்பும் ஐயா, இங்கே தங்க எங்களுக்கு இடமுண்டா என்று கேட்கும் போது சிறுவன் வாய் திறக்கவில்லை. பின்பக்கத்திலிருந்து ஆசிரியர் இடமில்லை என்று சொல்லு என்று சொல்லிக் கொண்டிருந்தார்கள். ஆசிரியர் ஐயோ கேவலப்படுத்துகிறானே என்றனர். அம்மா மனம் கலங்கி சொல்லு, சொல்லு என்றாள்.




jesuslives.in

சற்று நேரம் கழித்து அந்த சிறுவன் ஐயா! இங்கு இடமில்லை, எங்கள் வீட்டிற்கு வாருங்கள் அங்கு இடமிருக்கிறது என்று கண்ணீரோடு சொன்னான். பயங்கரமான கைதட்டல் எழும்பியது. அவனுக்கு பாராட்டுக்கள் குவிந்தது. இப்படி ஏதோ ஒரு தகுதியின்மையை நினைத்து, உலகம் நம்மை புறக்கணிக்க நேரிடலாம். ஆனால் அந்த தாய் பள்ளியில் பேசி தன் மகனை சேர்த்தது போல ஆண்டவர் நம்மை,தகுதியில்லாத நம்மை தம்மோடு சேர்த்துக் கொள்கிறார். ஏசாயா 54:7-ல் இமைப்பொழுது உன்னைக் கைவிட்டேன், ஆனாலும் உருக்கமான இரக்கங்களால் உன்னைச் சேர்த்துக் கொள்ளுவேன் என்று அவர் சொல்லுகிறார். எத்தனை சந்தோஷம்.

## தள்ளுண்டவர்களைச் சேர்த்துக் கொள்கிறார்

நம் ஆண்டவர் எப்படிப்பட்டவர்களைச் சேர்த்துக் கொள்கிறார். தள்ளுண்டவர்களைச் சேர்த்துக் கொள்கிறார். ஏசாயா 56:8-ல் இஸ்ரவேலில் தள்ளுண்டவர்களைச் சேர்க்கிற கர்த்தராகிய ஆண்டவர், அவனிடத்தில் சேர்க்கப்பட்டவர் களையல்லாமல் இன்னும் அவனிடத்தில் சேர்ப்பேன் என்கிறார். மிரியாம், மோசேயுடனே பிரயாணமாய் வரும்போது கர்த்தர் மோசேயைக் கொண்டு மாத்திரம் பேசினாரோ? எங்களைக் கொண்டு பேசினதில்லையோ? என்றாள். கர்த்தர் அதைக் கேட்டார். உண்மையில் மோசேயோடு கர்த்தர் பேசினதற்காக மட்டும் அவள் சொல்லவில்லை. அவள், மோசே எத்தியோப்பிய பெண்ணை திருமணம் முடித்து விட்டான் என்கிற கோபம், அவன் மேல் அவளுக்கு இருந்தது.



எண் 12:1, 2 வசனங்கள் சொல்கிறது. அதினிமித்தம் தேவகோபம் எழும்பியது. எண் 12:14,15-ல் கர்த்தர் மோசேயை நோக்கி, அவள் தகப்பன், அவள் முகத்திலே காறித்துப்பினதுண்டானால் அவள் ஏழுநாள் வெட்கப்பட வேண்டாமோ? அதுபோலவே அவள் ஏழுநாள் பாளயத்துக்குப் புறம்பே விலக்கப்பட்டிருந்தாள், மிரியாம்சேர்த்துக் கொள்ளப்படுமட்டும் ஜனங்கள் பிரயாணம் பண்ணாதிருந்தார்கள் என்று வாசிக்கிறோம். தேவனுடைய மனுஷனாகிய மோசேக்கு விரோதமாக பேசினதினிமித்தம் மிரியாம் தள்ளுண்டு போனாள். பாளயத்துக்குப் புறம்பே விலக்கி வைக்கும்படியான குஷ்டரோகம் அவளுக்கு வந்தது. இதைப் பார்த்த மோசே ஆண்டவரிடம் கதறினான். ஆண்டவரே அவளை குணமாக்கும், அவள் புத்தியீனமாய் செய்த பாவத்தை அவள் மேல் சுமத்தாதிரும் என்றான். தேவன் இரங்கினாலும், சின்ன சிட்சையாக ஏழுநாள் அவளைப் பாளயத்திற்குப் புறம்பே இருக்க வைத்து, பின்பு சேர்த்துக் கொண்டார். ஆண்டவரே விலக்கியிருந்த அவளைச் சேர்த்துக் கொண்டார். பாவம் நம்மை தேவனை விட்டு பிரித்து விடுகிறது. ஆதாமும், ஏவாளும் ஆண்டவரோடு தோட்டத்தில் உலாவி அவர் சத்தம் கேட்டனர். செய்ய வேண்டாம் என்று சொன்னதை செய்ததின் விளைவு அங்கிருந்து தேவன் துரத்தினார். பூமிக்குப் போ! எந்த மண்ணிலிருந்து எடுக்கப்பட்டாயோ அங்கேயே போய் நெற்றி வியர்வை நிலத்தில் விழ பாடுபடு என அனுப்பிவிட்டார். எரே 29:14-ல் நான் உங்களுக்குக் காணப்படுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார். நான் உங்கள் சிறையிருப்பைத் திருப்பி, நான் உங்களைத் துரத்திவிட்ட எல்லா ஜாதிகளிலும், எல்லா இடங்களிலுமிருந்து உங்களைச் சேர்த்து, நான் உங்களை விலக்கியிருந்த ஸ்தலத்துக்கே உங்களைத் திரும்பி வரப்பண்ணுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்று வாசிக்கிறோம். நான் உங்களைத் துரத்திவிட்ட எல்லா ஜாதிகளிலிருந்து உங்களைச் சேர்த்து, உங்களை விலக்கி இருந்த ஸ்தலத்துக்கே கொண்டு வருவதாக ஆண்டவர் சொல்கிறார். இயேசுவைப் பாருங்கள், ஐந்து புருஷர்களோடே வாழ்ந்து, ஆறாவது ஒருவரோடு இருக்கும் சமாரியப் பெண். அவளிடம் இயேசு



jesuslives.in

தண்ணீர் கேட்கிறார். யோவான் 4:9-ல் யூதர்கள் சமாரியருடனே சம்பந்தங் கலவாதவர்களானபடியால், சமாரியா ஸ்திரீ அவரை நோக்கி, நீர் யூதனாயிருக்கிறீரே, சமாரியா ஸ்திரீயாகிய என்னிடத்தில் தாகத்துக்குத்தா என்று தண்ணீர் கேட்கிறீரே என்றாள். அப்படி விலக்கப்பட்டவள், பாவத்தோடு இருக்கிறவள், இயேசு அவளைத் தேடிப் போய் மனம் திருப்பி தம்முடையவளாகச் சேர்த்துக் கொண்டார். சகேயு வரிவசூலிப்பவன், ஆயக்காரன். லூக்கா 19:7-ல் இவர் பாவியான மனுஷனிடத்தில் தங்கும்படி போனார் என்று ஜனங்கள் முறுமுறுத்தார்கள் தள்ளப்பட்ட, ஒதுக்கிவிடப்பட்ட, புறக்கணிக்கப்பட்ட மனிதர்களை ஆண்டவர் சேர்த்துக் கொள்கிறார். எரே 30:17-ல் அவர்கள், உன்னை விசாரிப்பாரற்ற சீயோன் என்று சொல்லி, உனக்குத் தள்ளுண்டவள் என்று பேரிட்டபடியால், நான் உனக்கு ஆரோக்கியம் வரப்பண்ணி, உன் காயங்களை ஆற்றுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார். மனிதர்கள் நம்மை விலக்கித் தள்ளியிருந்தாலும் நம்மை அவர் சேர்த்துக் கொள்கிறவராயிருக்கிறார். அதனால் தான் தாவீது சங் 27:10-ல் என் தகப்பனும், என் தாயும் என்னைக் கைவிட்டாலும், கர்த்தர் என்னைச் சேர்த்துக் கொள்ளுவார் என்கிறான். மனிதர்களால் தள்ளுண்ட யாவரையும் கர்த்தர் சேர்த்துக் கொள்வார். யோவான் 9:34,35-ல் பிறவிக்குருடனைத் தேவாலயத்தை விட்டு புறம்பே தள்ளிவிட்டார்கள். அவன் இயேசுவைப் பற்றிப் பேசினதினிமித்தம் பரிசேயர் செய்ததை இயேசு அறிந்து, அவனை அவர்கள் புறம்பே தள்ளிவிட்டதை இயேசு கேள்விப்பட்டு, அவனைக் கண்டார். அவனோடு பேசி தம்மை வெளிப்படுத்தினார். அதனால் தான் தள்ளுண்டவர்களை அவர் சேர்த்துக்கொள்வார் என்ற நம்பிக்கையோடு ஏசாயா சொல்லுகிறான் நெகே 1:9-ல்.....தம்முடைய ஜனத்தில் மீதியானவர்களை மீட்டுக்கொள்ள திரும்ப இரண்டாம் விசை தமது கரத்தை நீட்டி ஜாதிகளுக்கு ஒரு கொடியை ஏற்றி, இஸ்ரவேலிலே துரத்துண்டவர்களைச் சேர்த்து யூதாவில் சிதறடிக்கப்பட்டவர்களை பூமியின் நான்கு திசைகளிலுமிருந்து கூட்டுவார். துரத்துண்ட, தள்ளுண்ட யாவரையும் மன்னித்துச் சேர்த்துக் கொள்கிறவர். நம் ஆண்டவர் இரண்டாம் விசை கையை நீட்டி நம்மை இழுத்துக் கொள்கிறவர்.

## நீர் சேர்த்துக் கொள்கிறவன் பாக்கியவான்

கோழி, வானத்திலே வட்டமிடும் பருந்துக்கு தன் குஞ்சுகள் இரையாகி விடக்கூடாதே என்று பலத்த சத்தமிடும், குஞ்சுகள் சத்தம் கேட்டு தாய்க் கோழியின் சிறகுக்குள் வந்து விட்டால் தப்பித்துக் கொள்ளும் என்று தான். சங் 65:4-ல் உம்முடைய பிரகாரங்களில் வாசமாயிருக்கும்படி நீர் தெரிந்துகொண்டு சேர்த்துக் கொள்ளுகிறவன் பாக்கியவான் என்று சங்கீதக்காரன் சொல்கிறார். ஆண்டவரோடு, அவர் பிரசன்னத்தில் களிகூருகிற மனுஷன் பாக்கியவான். ராகாப் என்ற வேசியின் வீட்டில் வேவுகாரராய், யோசுவா அனுப்பின இரண்டு பேரை அவள் ஒளித்து பாதுகாத்ததினிமித்தம், இஸ்ரவேலின் தேவனை நம்பினதினிமித்தம் யோசுவா 2:17-ல் நாங்கள் இந்த தேசத்துக்குள் பிரவேசிக்கும்போது, நீ இந்தச் சிவப்பு நூல் கயிற்றை எங்களை இறக்கிவிட்ட ஜன்னலிலே கட்டி, உன் தகப்பனையும், உன் தாயையும், உன் சகோதரர்களையும், உன் தகப்பன் குடும்பத்தார் அனைவரையும் உன்னிடத்தில் உன் வீட்டில் சேர்த்துக் கொள் என்று சொல்கிறதை நாம் வாசிக்கிறோம். அவள் நிமித்தம் வீட்டார் அனைவருக்கும் தயவு கிடைத்தது. அவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள். இந்த தயவு தான் நம்மையும், நம் வீட்டரையும் சேர்த்துக் கொள்ளப்போகிறது.





jesuslives.in

ஆகா 2:23-ல் சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார், செயல்த்தியேலின் குமாரனாகிய செருபாபேல் என்னும் என் ஊழியக்காரனே, உன்னை நான் அந்நாளிலே சேர்த்துக் கொண்டு, உன்னை முத்திரை மோதிரமாக வைப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார். நான் உன்னைத் தெரிந்துகொண்டேன் என்று சேனைகளின் கர்த்தர் உரைக்கிறார் என்று சொல் என்றார். ஊழியக்காரர்களைச் சேர்த்துக் கொள்கிறவர். ராஜாவுக்குப் பானபாத் திரக்காரனாயிருந்த ஒருவன் ஏதோ தவறினிமித்தம் சிறையிலடைக் கப்பட்டான். யோசேப்பு சிறையிலடைக்கப் பட்டிருந்த அந்த நாட்களில் பானபாத்திரக்காரன் சொப்பணம் கண்டான், அதை யோசேப்பு அவனுக்கு விவரித்தபடியே திரும்பவும் தன் ஸ்தானத்தில் நிலை நிறுத்தப்பட்டான். பெருமையினிமித்தம் மாட்டைப் போல புல் மேய்ந்து கொண்டிருந்த நேபுகாத்நேச்சார் மனம் வருந்தி தன் அகந்தையையும், மேட்டிமையையும் உணர்ந்து, தன்னை தாழ்த்தின போது திரும்பவும் அந்த ஸ்தானத்தைப் பெற்றான். சக 3:1-10 வசனங்களில் பிரதான ஆசாரியனாயிருந்த யோசுவா அழுக்குப்படிந்த ஆடை அணிந்திருந்த போது, அதை அகற்றி, சிறந்த வஸ்திரத்தை உடுத்தி நிலை நிறுத்தினவர், தேவபிள்ளைகள் வாழ்வில் இருக்கும் குறைகள், கறைகள் யாவும் போக்கி நம்மைச் சேர்த்துக் கொள்வது மட்டுமல்ல, முத்திரை. மோதிரமாக,



முக்கியமான நபராக மாற்றுவார். அதனால் தான் தாவீது நீர் தெரிந்து கொண்டு சேர்த்துக் கொள்ளுகிறவன் பாக்கியவான் என்கிறார் ஆடுகள் பின்னே தேவனைத் துதித்துக் கொண்டிருந்த தாவீதை, சாமுவேலைக் கொண்டு தைலக்குப்பியை எண்ணெயால் நிரப்பி, தேடிப் போய் தெரிந்து கொண்டு அபிஷேகித்து தேவன் சேர்த்துக் கொண்டார். 1 நாளா 16:34,35-ல் கர்த்தரைத் துதியுங்கள், அவர் நல்லவர், அவர் கிருபை என்றுமுள்ளது. எங்கள் இரட்சிப்பின் தேவனே, நாங்கள் உமது பரிசுத்த நாமத்தைப் போற்றி, உம்மைத் துதிக்கிறதினால் மேன்மை பாராட்டும்படிக்கு, எங்களை இரட்சித்து, எங்களைச் சேர்த்துக் கொண்டு, ஜாதிகளுக்கு எங்களை நீங்கலாக்கியருளும் என்று சொல்லுங்கள் என்கிறான். ஆண்டவரே! எங்களை இரட்சிக்கிறவரே! உமது நாமத்தைப் போற்றித் துதிக்கிறதைக் குறித்து நாங்கள் மேன்மை பாராட்ட எங்களைச் சேர்த்துக் கொள்ளும். இன்னல்களுக்கு நீங்கலாக்கும் என்று ஜெபிக்கிறான். நாம் ஆண்டவரைப் போற்றித் துதிக்கிற போது, ஜெபிக்கிற போது நாம் மேன்மை பாராட்டும்படியான காரியங்களை தேவன் நமக்குச் செய்தருளுவார். சங் 107:1-3-ல் கர்த்தரைத் துதியுங்கள், அவர் நல்லவர், அவர் கிருபை என்றுமுள்ளது. கர்த்தரால் சத்துருவின் கைக்கு நீங்கலாக்கி மீட்கப்பட்டு, கிழக்கிலும், மேற்கிலும், வடக்கிலும் தெற்கிலுமுள்ள பல தேசங்களிலுமிருந்து சேர்க்கப்பட்டவர்கள், அப்படிச் சொல்லக்கடவர்கள். கர்த்தரால் சத்துருவின் கைக்கு நீங்கலாக்கி மீட்கப்பட்டவர்களும், நான்கு திசைகளிலுமிருந்து சேர்க்கப்பட்டவர்கள் கர்த்தரைத் துதித்து, அவர் நல்லவர், அவர் கிருபை என்றுமுள்ளது என்று சொல்ல வேண்டும் என்று கூறுகிறதைப் பார்க்கிறோம்.



jesuslives.in

# சிட்சித்து சேர்த்துக் கொள்கிறார்

இப்போது உள்ள கால சூழ்நிலையில் எல்.கே.ஜீ-க்கு கூட நுழைவுத் தேர்வு வைத்துதான் பிள்ளைகளை ஸ்கூலில் சேர்த்துக் கொள்கிறார்கள். ஒரு பள்ளியிலிருந்து மற்றொரு பள்ளிக்கு மாறினால் அங்கும் நுழைவுத் தேர்வு. தேர்ச்சி பெற்ற ஆசிரியர்களுக்கு கூட தகுதித் தேர்வு வைக்கப்படுகிறது. எப்படியோ ஒரு சிட்சையில் தான் சேர்க்கப்படுகிறார்கள். எபி 12:6-ல் கர்த்தர் எவனிடத்தில் அன்பு கூருகிறாரோ, அவனை அவர் சிட்சித்து, தாம் சேர்த்துக் கொள்ளுகிற எந்த மகனையும் தண்டிக்கிறார் என்று பிள்ளைகளுக்குச் சொல்லுகிறது போல உங்களுக்குச் சொல்லியிருக்கிற புத்திமதியை மறந்தீர்கள் என்று வாசிக்கிறோம். சிட்சித்துச் சேர்த்துக் கொள்வது ஆண்டவரின் வழிகளில் ஒன்று. எவனிடத்தில் அன்பு கூருகிறாரோ அவனைத்தான் சிட்சிக்கிறார். நாம் சிட்சை, பாடுகள் வந்த உடனே ஆண்டவர் என்னை மறந்துவிட்டாரோ! கைவிட்டுவிட்டாரோ! என்று எண்ணுகிறோம். அன்பு கூர்ந்ததால் தான் சிட்சிக்கிறார். சிட்சை வரும்போது தேவன் என்னை அளவில்லாமல் நேசிக்கிறார் என்று எண்ண வேண்டும். யாத் 6:6,7-ல் ஆண்டவர் எகிப்தின் எல்லாச் சுமைகளை நீக்கி, அடிமைதனத்திற்கு நீங்கலாக்கி, ஓங்கிய கையினாலும், மகா தண்டனைகளினாலும் உங்களை மீட்டு, உங்களை எனக்கு ஜனங்களாகச் சேர்த்துக் கொண்டு, உங்களுக்கு தேவனாயிருப்பேன், உங்கள் மேல் எகிப்தியர் சுமத்தின சுமைகளை நீக்கி, உங்களை விடுவிக்கிற உங்கள் தேவனாகிய கர்த்தர் நான் என்று அறிவீர்கள். தண்டனைகளால் அவர் நம் ஆத்துமாவை மீட்டுக் கொள்கிறார். ஆபிரகாமைப் பாருங்கள் தேவனை அளவில்லாமல் நேசித்த அவன் இருதயம், மகன் ஈசாக்கு வந்த உடனே தேவனை விட அதிகமான நேரம் ஈசாக்கோடு செலவு பண்ணினான். ஒருவேளை, இன்று பரவாயில்லை நேரமாகிவிட்டது. ஆண்டவரை சந்திக்காவிட்டால் என்ன? ஆண்டவருக்கு என் நிலை தெரியுமே என்று இப்படி இருந்திருப்பானோ? அதிகமாய் நேசிக்கிற உன் ஏகசுதனும், ஏகபுத்திரனும், உன் நேசகுமாரனை தகனபலியாக பலியிடு என்ற ஒரு சிட்சையை அனுமதித்தார். ஆபிரகாம் சற்று திகைத்திருப்பான், ஏன் என்று





jesuslives.in

யோசித்துப் பார்த்திருப்பான். அவனுக்குத் தெரிந்துவிட்டது ஆண்டவரை விட அதிகம் ஈசாக்கின் மேல் அன்பு வைத்திட்டேன், எனக்கு ஈசாக்கை விட ஆண்டவர் வேண்டும் என்ற கட்டத்திற்கு அவன் வரும் வரை எவ்வளவு நொறுங்கி இருப்பான். இந்த சின்ன சிட்சையால் ஆபிரகாமை, தேவன் தன்னை விட்டுப் பிரிந்திருந்த அவனை தம்முடைய அன்பினால் சேர்த்துக் கொண்டார். ஏதோ ஒன்று நம்மை அடிமைப்படுத்திக் கொண்டிருக்கலாம், இஸ்ரவேலரை எகிப்து அடிமைப்படுத்தியது.

உபா 4:20-ல் இந்நாளில் நீங்கள் இருக்கிறதுபோல, தமக்குச் சுதந்தரமான ஜனமாயிருக்கும்படி கர்த்தர் உங்களைச் சேர்த்துக் கொண்டு, உங்களை எகிப்து என்னும் இருப்புக்காளவாயிலிருந்து புறப்படப்பண்ணினார். தமக்கு சுதந்தரமாயிருக்கும்படி அடிமைத்தனத்திலிருந்து அவர்களை தம்மோடு சேர்த்துக்கொள்ள கொண்டு வந்தார்.

உபா 30:3-லும் உன் தேவனாகிய கர்த்தர் உன் சிறையிருப்பைத் திருப்பி, உனக்கு இரங்கி, உன் தேவனாகிய கர்த்தர் உன்னைச் சிதற அடித்த எல்லா ஜனங்களிடத்திலும் இருக்கிற, உன்னைத் திரும்பச் சேர்த்துக் கொள்ளுவார் என்று பார்க்கிறோம். நம்முடைய எல்லா சிறையிருப்பையும், திருப்ப யாரால் கூடும், நமக்கு இரங்க யாரால் கூடும், இயேசு ஒருவரே நம்மைத் திரும்பச் சேர்த்துக் கொள்ளப் போகிறார்.

செப் 3:20-லும் உங்களைக் கூட்டிக் கொண்டு வருவேன், உங்களைச் சேர்த்துக் கொள்ளுவேன் என்றார். அது மட்டுமல்ல யோவான் 14:3-ல் நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணினபின்பு நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக் கொள்ளுவேன் என்றார்.

எல்லாவற்றிற்கும் மேலாக ஆண்டவர் நம் ஒவ்வொருவருக்கும் ஒரு ஸ்தலத்தை ஆயத்தம் செய்து கொண்டிருக்கிறார். நம்மை அவரோடு சேர்த்துக்கொள்ள அதிசீக்கிரம் வரப்போகிறார். அவர் வந்து, அவருக்காக வாழ்ந்த, எதிர்பார்ப்போடு காத்திருக்கிற நம்மை அவரோடு சேர்த்துக் கொள்வார். நாம் அவரோடு இருப்பது எத்தனை பாக்கியம். அவர் நம்மை தம்மோடு சேர்த்துக் கொள்வது எத்தனை ஆனந்தம்!. அவரை விட்டுப்பிரிந்த, தள்ளுண்ட நம்மை அணைத்துக் கொள்ளும், அவரது அன்பு எத்தனை பெரியது. உன்னை இரக்கங்களால் சேர்த்துக் கொள்ளுவேன் என்று சொன்ன ஆண்டவர் நம் ஒவ்வொருவரையும் சேர்த்துக் கொள்வாராக!.



Jesus Lives MINISTRIES

Location
Chennai & Madurai

# SCHOOL OF MEDIA & IT

*CERTIFICATE COURSE IN MEDIA*

## உங்கள் வாழ்க்கையை மாற்றும் 12 வார மீடியா ஊழிய பயிற்சி

**Duration : 3 மாதங்கள்**
**ஜூன் 2023 முதல்**

**பயிற்சியில் சிறந்து விளங்குவோர்க்கு பல்வேறு ஊழியங்களில் மீடியா பிரிவில் பணிபுரிய முன்னுரிமை அளிக்கப்படும்.**



**கல்வி தகுதி**
*12th (or) B.Sc Viscom (or) Any degree*

**வயது வரம்பு**
*18 முதல் 30 வரை (இருபாலரும்)*
நேர்முக தேர்வு மூலம் அனுமதிக்கப்படுவர்

## Courses

### MEDIA
- Designing
- Editing
- Graphics Designing
- Live Production
- Broadcasting
- Camera and Lightings

### IT
- System Admin
- Network management
- Website design
- Server Management

- 70%practical with Hands on Experience
- தங்குமிடம் இலவசம்
- தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களுக்கு (ரூ.7,500p/m) இயேசு வாழ்கிறார் ஊழியங்கள் மூலமாக பயிற்சிக் கட்டணம் செலுத்தப்படும்

**மேலும் விவரங்களுக்கு**
Mr.Immanuel - 7825047825, Sis.Sofia - 9498000449

**Online Application**
www.dprince.in/institute

**விண்ணப்பிக்க கடைசி நாள் மே 25 2023**

jesuslives.in



# நிச்சயமாகவே முடிவு உண்டு, உன் நம்பிக்கை வீண்போகாது

**நிச்சயமாகவே முடிவு உண்டு, உன் நம்பிக்கை வீண்போகாது. நீதி 23:18**
**உன் முடிவைப்பற்றி உனக்கு நம்பிக்கையுண்டு, உன் பிள்ளைகள் தங்கள் தேசத்துக்குத் திரும்பி வருவார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். எரே 31:17**

கிறிஸ்துவில் அன்பான வாலிபத்தம்பி, தங்கைகளே, நீங்கள் எதிர்பார்த்திருக்கும் முடிவை, உங்களுக்குக் கொடுக்கும்படி, உங்கள் சமாதானத்துக் கானவைகளையே, உங்களையே நினைத்துக் கொண்டிருக்கிற (எரே 29:11) நம் ஆண்டவர் இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள். நான் நம்பினதெல்லாம் வீணாய் போயிருச்சே, எனக்கு ஒரு நல்ல முடிவு, ரிசல்ட் பதில் வராதா? என்று கதறிக்கொண்டும் பதறிக்கொண்டுமிருக்கிற உன்னைப் பார்த்துதான் சொல்லுகிறார் **Sure** ஆக உனக்கு நலமான முடிவு உண்டு. உன் நம்பிக்கை வீண் போகாது. பாகிஸ்தானில் மிகுந்த வைராக்கியமுள்ள, வசதியுள்ள இஸ்லாம் குடும்பத்தில்



jesuslives.in

பிறந்தவள் குல்ஷான் பாத்திமா. ஆறு மாதக் குந்தையாயிருந்தபோது ஏற்பட்ட காய்ச்சலினால் அவரது இடது காலும், இடது கையும் செயிலிழந்து போனது. அவளது தகப்பன் அவளை லண்டனுக்கு அழைத்துச் சென்று எப்படியாவது என் மகளை
நான் நடக்க வைத்து விடவேண்டும் என்று முயற்சி செய்தார். ஆனால் குணப்படுத்த முடியவில்லை. மெக்காவுக்கு ஹஜ் பயணத்துக்கு அவளையும், அவளுக்கு உதவி செய்ய கூடவே இரண்டு பெண்களையும் அழைத்துச் சென்றார். சுகம் பெறாததைக்கண்டு குல்ஷன் சோர்ந்து போனாள். ஆனாலும் தகப்பனது அன்பும், குடுப்பத்தாரின் பராமரிப்பும் வீட்டில் சிறந்த கல்வியும் அவளுக்கு கிடைத்தது. இஸ்லாம் முறைப்படி தொழுகைகளையெல்லாம் சரியாக செய்து வந்தாள் குல்ஷான். இரண்டு வருடம் கழித்து, அவளது அப்பா இறந்து போனார். மிகுந்த மனவேதனை அடைந்து குல்ஷான் தானும் மரித்துப் போகவேண்டும் என்று நினைத்தாள். ஆனால் அவளால் அதை செய்ய முடியாதபடி தனது கையும், காலும் இருக்கிறதே என்று மிகுந்த மன வேதனையில் இருந்து அழுது கொண்டிருக்கிற போது **நீ மரிக்க நான் விடமாட்டேன், நான் உன்னை உயிருடன் காத்துக்கொள்வேன்** என்று ஒரு மெல்லிய சத்தம் அவளோடு பேசினதைக் கேட்டு, என்னை காப்பற்றுவதால் உமக்கு என்ன பயன், என் தந்தையையும் எடுத்து கொண்டீரே, நம்பிக்கையற்றவளாய் வாழ்ந்து கொண்டிருக்கிறேனே என்று அவள் சொன்னவுடன், குருடருக்கு பார்வையைக் கொடுத்தது யார்? குஷ்டரோகியை சுகமாக்கியது யார்? மரித்தோரை உயிரோடு எழுப்பியது யார்? **நானே அந்த இயேசு.** மரியாளின் மகன், என்னைக் குறித்து குர்ஆனிலே சூரா மரியாமில் வாசித்துப்பார் என்று ஆண்டவர் பேசினவுடன், அவளுக்கு ஒரு நம்பிக்கை வந்தது. அரபி மொழியிலும், உருது மொழியிலும் அதை வாசித்துப் பார்த்து, தான் குணமாக்கப்படுவேன் என்ற நம்பிக்கையைப் பெற்றுக்கொண்ட குல்ஷான். தான் செய்து வந்த தொழுகையிலே மரியாளின் குமாரனே, இயேசுவே என்னை குணமாக்கும் என்று அடிக்கடி ஜெபித்து வந்தாள். மூன்று ஆண்டுகள் கழித்து ஒருநாள் அதிகாலை வேளையில் ஆண்டவர் அவளது அறையில் தோன்றி **நீ எழுந்து நில்,** என் அண்டை வா, நானே இயேசு என்றார். என்ன ஆச்சரியம், 19 ஆண்டுகளாக சூம்பிப்போன இடது கையும், இடது காலும் பெலனடைந்து நன்றாக நடக்கத்து வங்கினாள். நானே வழியும், சத்தியம், ஜீவன். நான் உன்னோடு இருப்பேன் என்றார். தனக்கு சாட்சியாக வரும்படி, வாழும்படி ஆண்டவர் அவளை அழைத்தார். சொந்தங்களையும், சொத்துக்களையும் விட்டுவிட்டு **குல்ஷான், எஸ்தர் என்ற பெயரில்** ஞானஸ்நானம் பெற்று எதிர்ப்புக்களையும் தாண்டி இயேசுவுக்காக வல்லமையாய் ஊழியம் செய்தாள். குல்ஷானின் நம்பிக்கை வீண் போகவில்லை.



15 வருஷம் ஆயுசு நாட்கள் கூட்டிக் கொடுக்கப்பட்ட, எசேக்கியா ராஜா யூதா நாட்டை ஆட்சி செய்த போது, அசீரியா நாட்டு ராஜா சனகெரிப், யூதாவின் நல்ல பாதுகாப்பான பட்டணங்களைப் பிடித்துக் கொண்டான்.தன்னுடைய சேனைத்தலைவன்



jesuslives.in

ரப்சாக்கே என்பவனை அனுப்பி, எசேக்கியாவுக்கு விரோதமாக பேச வைக்கிறான். எங்களிடம் சரணடைவதற்குப் பதிலாக, எங்களை விரோதித்துக் கொண்டு யார்? மேல் நம்பிக்கை வைத்திருக்கிறாய். நீ நம்பியிருக்கிற இந்த நம்பிக்கை என்ன?. கர்த்தர் தான் உங்களைச் சிறைபிடிக்கும்படி எங்களை அனுப்பியுள்ளார். உங்களை எங்கள் கைக்கு தப்புவிக்கிற தெய்வம் உண்டா? என்று கேலியும் பரியாசமுமாய், இன்னும் இதைவிட கீழ்த்தரமாய் பேசினான். எசேக்கியா, ஏசாயா தீர்க்கதரிசியிடம் இவை அனைத்தையும் சொல்லச் சொல்லி ஆட்களை அனுப்பி விட்டு, அவரும் ஆலயத்திற்குச் சென்று, ஆண்டவர் மேல் முழுநம்பிக்கை வைத்தவராய், சனகெரிப் எழுதியனுப்பின வார்த்தைகளை விரித்து வைத்து ஆண்டவரே, பூமியனைத்திற்கும் நீர் தான் தேவன், வானத்தையும், பூமியையும் உண்டாக்கினவர் நீர் ஒருவரே கர்த்தர் என்று எல்லாரும் அறியும்படி, எங்களை அவன் கைக்கு நீங்கலாக்கி இரட்சியும் என்று விண்ணப்பம் பண்ணினான். (ஏசாயா 36 37 அதிகாரங்கள்). அப்பொழுது ஆண்டவர் ஏசாயா மூலமாக பேசினார். அந்த அசீரியா ராஜா எருசலேமுக்குள் வருவது இல்லை. அவன் தான்வந்த வழியே திரும்பிப் போவான். யூதா வம்சத்தாராகிய நீங்களோ மறுபடியும் கீழே வேர் பற்றி மேலே கனி கொடுப்பீர்கள். நான் உங்களைக் காப்பாற்றும்படி உங்களுக்கு ஆதரவாயிருப்பேன் என்றார். அப்பொழுது கர்த்தருடைய தூதன் அசீரியரின் பாளயத்திலிருந்த 1,85,000 பேரைச் சங்கரித்தான். அதைப்பார்த்த சனகெரிப் தன் தேசத்திற்குத் திரும்பப் போய்விட்டான். எசேக்கியாவின் நம்பிக்கை வீண்போகவில்லை. அதன்பின் அசீரியர்களின் தொல்லையுமில்லை.

ஆண்டவர் மீதுள்ள உங்கள் நம்பிக்கையைக் குறித்து, தவறாய் பேசுகிறார்களா? இழிவான பேச்சுக்களாலும், பரியாசங்களாலும் தலைகுனிந்து நிற்கிறீர்களா? எதைச் செய்தாலும், காத்திருந்தாலும் ஒரு பலனையும் பார்க்க முடியவில்லையே, எல்லாமே தோல்வியாகிறதே, ஒரே போராட்டம், பிரச்சனை என்று திகைத்து நிற்க வேண்டாம். உங்களுக்கு அருகேயிருக்கும் அல்லது நீங்கள் செல்லும் ஆலயத்திற்குச் சென்று அல்லது உங்கள் வீட்டிலேயே ஆண்டவர் இயேசுவிடம் உங்கள் விண்ணப்பத்தை சொல்லுங்கள். உங்களுக்கு எதிராய் செயல்படும் சத்துருவின் வல்லமைகளை முறியடித்து, எதிராய் செயல்படுபவர்களை விலக்கிப் போடுவார். இனி நீங்கள் செய்யும் அனைத்திலும் பலனைப் பார்ப்பீர்கள். ஆண்டவரே உங்களுக்கு ஆதரவாக இருப்பார், காப்பாற்றுவார். தொடர்ந்து நம்பிக்கையாயிருங்கள் உங்கள் நம்பிக்கை வீண்போகாது. சங் 73:24-ன்படி ஆண்டவருடைய ஆலோசனைகளின்படி உங்களை நடத்தி, மகிமையான ஒரு முடிவைத் தரவே தேவன் உங்கள், உன் பேரில் நினைவாயிருக்கிறார் எனவே சோர்ந்து போகாதிருங்கள். உங்கள் வாழ்க்கையிலே, படிப்பு, வேலை, திருமணம்....எல்லாவற்றிலும் நல் முடிவை தந்து கர்த்தர் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக.





jesuslives.in

இயேசு வாழ்கிறார் மீடியா துறைக்கு

# வேலைக்கு ஆட்கள் தேவை

இடம்
மதுரை
சென்னை
திண்டுக்கல்

## Available Positions :

#On Site
**MANAGER - MEDIA OPERATIONS**
Should take care of the entire media operations with vast knowledge in media and digital media with latest technology implementation. Should be Expert in Team handling and the projects.

#Hybrid
**GRAPHIC DESIGNER**
Should have vast knowedgle in Corel Draw,Adobe in design and illustrator. Should have the idea of print media and good work skill on digital platform desgin work as per the platforms

#Hybrid
**CONTENT WRITER**
Should have a biblical knoweldge to write the content both in print media as well as in the Digital Platfoms. Excellent wrtining and communicating skill needed.

## Available Positions :

#On Site
**PROGRAM PRODUCER / DIRECTOR**
Planning and creating new program as per the Inputs and need to have a vast knowledge in creating content from production to broadcasting . Knoweldge in Target Audience is a must.

#Hybrid
**VIDEO EDITOR**
Should have vast knowedgle in Premire Pro, Davinci Resolve and FCP X. With creative Edit Skill using the lastest Desinging skill as per the broadcast Standard

#On Site
**SOUND ENGINEEER**
Should have a work experience in Live sound Reinforcment and should handle the Aduio Studio in addtion the Live Broadcasting in realtime.

## Available Positions :

#Hybrid
**MOTION GRAPHICS DESIGNER**
Should have vast knowedgle in After effects, Premiere pro and photoshop with good creative skill. Using the realtime graphics and virtual studio idea will be a plus.

#On Site
**CAMERAMAN**
Should Operate the camera with lighting and audio knowledge.Ready to learn and implement the latest technology

#On Site
**PHOTOGRAPHER**
Able to handle the DSLR and to work on the lightroom. Good Knowdelge with Creative Skill. Four Wheel Driving Experi- ence Needed.

Christian Candidates Having a Zeal to Work in a Christian Organisation can APPLY

**இப்பொழுது விண்ணப்பியுங்கள்**

https://jesuslives.in/careers/
OR
Email : connect@dprince.in
OR
Whatsapp : +91 7825 04 7825
OR
Whatsapp : +91 9498 00 0449

* Any UG/PG Candidates with respective Skill
* Bsc Visual Commuication or Any Media Studies or Experience in the respective Field.
* Experienced Staffs will be given Good Remuneration.
* Food And Accomodation will be provided.
* Male & Female can Apply.
* Fresher are welcomed whereas will undergo 3 months training without stipend.

jesuslives.in

# இயேசப்பா சீக்கிரமா வாங்கப்பா

## ஹலோ குட்டீஸ் நல்லாயிருக்கீங்களா!

கண்மணி. கிச்சன் செட் வைத்து அவ ப்ரண்ட்ஸோட விளையாடிட்டு இருந்தா, அவ அப்பா பைக் சத்தம் கேட்டவுடனே, அப்பா வந்துட்டார் என்று விளையாட்டு சாமான்களையெல்லாம் அப்படியே போட்டுட்டு அப்பா என்று கூப்பிட்டுக்கிட்டே அப்பாகிட்ட போனாள். ராஜேஷ் டியூசனுக்கு போயிருந்தான், 8 மணி ஆகியும் அப்பா வரல, அவனுக்கு பசி ஒருபுறம், பயம் ஒருபுறம் அழுதுகிட்டே, அப்படியே தூங்கிட்டான். சிறிது நேரம் கழித்து அப்பா வந்தார். திடீர்னு நண்பர் வீட்டிற்கு வந்துட்டார். அதுதான் தாமதமாயிருச்சுன்னு ராஜேஷின் அப்பா சொல்லிவிட்டு, ராஜேஷ் என்று அவனைக் கூப்பிட்டார். நன்றாய் தூங்கிக் கொண்டிருந்த ராஜேஷ் அப்பா குரலைக் கேட்டவுடனே அப்பா என்று கூப்பிட்டுக் கொண்டே அப்பாவிடம் ஓடிச்சென்றான். நமக்காக சிலுவையில் மரித்து,





jesuslives.in

மூன்றாம் நாள் உயிரோடு எழுந்த இயேசப்பா, 40 ஆம் நாள் பரலோகம் போயிட்டாங்க. அங்கேயிருந்து இயேசப்பா மீண்டும், பூமிக்கு ராஜாவா வரப்போறாங்க. அவரைப் பார்க்கிறதற்கு நீங்க ரெடியாகனும் குட்டீஸ். ஐயோ! எப்படி ரெடி ஆகிறதுன்னு.... ஒன்னும், ஒரிபண்ண வேண்டாம். கண்மணிக்கு அப்பாவுடைய பைக் சத்தம் கேட்டு கேட்டுப் பழக்கமானதினால் விளையாண்டுகிட்டு இருந்தாலும் பைக் சத்தம் கேட்டவுடேனே விளையாட்டு சாமான்களை அப்படியே போட்டுட்டு அப்பான்னு ஓடினமாதிரி, இயேசப்பா கிட்ட தினமும் பேசினீங்கன, அவர் வார்த்தையை (பைபிள்) படிச்சீங்கன, அவர் குரல் உங்களுக்கு பழக்கமாயிரும். அப்புறம் என்ன? அவர் குரல் கேட்டவுடனே அப்பான்னு அவர் கிட்ட ஓடி போயிரலாம். அப்பா வர லேட் ஆனதாலே ராஜேஷ் பசியோடும், பயத்தோடும் அழுதுகிட்டு இருந்த மாதிரி, இன்னும் நிறைபேர் மனந்திரும்பனும்னு சொல்லி, இயேசப்பா இந்த உலகத்திற்கு வர்றதும் கொஞ்சம் தாமதமாகுது. கொள்ளை நோய், நிலநடுக்கம், பஞ்சம்னு கஷ்டங்களும் இருக்கிறதைப் பார்த்து, நாம் பயந்து, அழுதுகிட்டு இருக்காம, இயேசப்பா எப்ப வர்றாரோ வரட்டும்னு சொல்லிகிட்டு அக்கறையில்லாமலும், அசதியாய் இராமலும் தினமும் இயேசப்பாகிட்ட பேசிகிட்டு, அவருக்குப் பிடிச்சதையெல்லாம் செய்யுங்க. உங்களுடைய படிப்பு, சின்ன சின்ன வேலைகளை சந்தோஷமா செய்யுங்க. இயேசப்பா சீக்கிரமா வாங்கப்பான்னு ஆசையா சொல்லுங்க!

ஓகே குட்டீஸ் **Be Ready.**

## ஜெபம்

அன்புள்ள இயேசப்பா,
நான் செய்த தவறுகளையெல்லாம் மன்னியுங்க, உங்க இரத்தத்தால் என்னை கழுவுங்க. என்னை உங்க பிள்ளையாய் ஏற்றுக்கொள்ளுங்க. நீங்க எனக்காக மரித்து, உயிரோடு எழுந்ததை நம்புகிறேன். எனக்காக மீண்டும் வரப்போறதையும் நம்புறேன். இயேசப்பா என் உள்ளத்திற்குள்ள வாங்க, உங்க வருகைக்காக ஆயத்தமாகி காத்திருக்க உதவி செய்யுங்க. இயேசுவின் நாமத்தில் பிதாவே ஆமென்.

## மனப்பாட வசனம்

மெய்யாகவே நான்,
சீக்கிரமாய் வருகிறேன். ஆமென், கர்த்தராகிய இயேசுவே வாரும். வெளி 22:20





jesuslives.in


நம்பிக்கையின் இரவு
NIGHT OF HOPE
Sis KALA VINCENTRAJ
Bro MOHAN C LAZARUS
Bro L.VINCENTRAJ
புதிய மாத ஆசீர்வாத
வாக்குத்தத்த ஜெபம்
ஏப்ரல் 30
இரவு 10.30 மணி முதல் 12.30 மணி வரை
ஒவ்வொரு மாதமும் கடைசி நாள் இரவு 10.30 மணி முதல் மாதத்தின் முதல் நாள் 12.30 மணி வரை
நமது இயேசு வாழ்கிறார் ஊழியங்கள் YOUTUBE சேனலில் ஒளிபரப்பாகிறது
உங்கள் ஜெப விண்ணப்பங்களை அனுப்புங்கள்.
உங்களுக்காக ஜெபம் ஏறெடுக்கப்படும்
அனுப்ப வேண்டிய எண்
944 28 00 449
மே
14 ஞாயிறு
15 திங்கள்
16 செவ்வாய்
தினமும் மாலை 7:30 மணிக்கு
நாசரேத் பிள்ளையன்மனையில்
64 வது உயிர்மீட்சி கூட்டங்கள்
இடம் CSI தூய பரமேறுதலின் ஆலயம் பிள்ளையன்மனை

# வாருங்கள் இணைந்து ஊழியம் செய்வோம்!

## உடன் ஊழியர்கள் தேவை!

காலி பணியிடங்கள்

**ADMINISTRATIVE** OFFICER'S ............ 2

**Manager** Ministry Operation's ............ 1

**Office Assistant's** With Driving Skill ............ 2

**Cook** To cook for 20 Members ............ 2

**Volunteer** Prayer Warriors ............ 15

இப்பொழுதே!
விண்ணப்பியுங்கள்

**Whatsapp**
+91 7825 04 7825
+91 9498 00 0449

jesuslives.in



# இயேசுவே பரிகாரி

**சகோதரி. பஞ்சவர்ணம் - சென்னை**

நான் கடந்த 6 மாதங்களாக வயிறு ஊத்தத்தினாலும், வாயு பிரச்சனையினாலும் மிகவும் கஷ்டப்பட்டேன். எவ்வளவோ மருந்து மாத்திரைகள் எடுத்தும் சரியாகவில்லை. நான் விரும்பின உணவையும் என்னால் சாப்பிட முடியாமல் மனஉளைச்சலினாலும், வேதனையினாலும் இருந்தேன். கடந்த 1-ஆம் தேதி அன்று என் சரீர சுகத்திற்காக ஜெபிக்குமாறு தொலைபேசியில் தொடர்பு கொண்டு ஜெபிக்க கேட்டேன். சகோதரி அவர்கள் எனக்காக ஜெபித்தார்கள், என்னையும் வயிற்றில் கை வைத்து ஜெபிக்கச் சொன்னார்கள், நானும் அன்று இரவில் என் வயிற்றில் கை வைத்து ஜெபித்தேன். அன்றே தேவன் எனக்கு பரிபூரண சுகத்தை தந்தார். ஆறு மாதங்களாக வயிறு ஊத்தத்தினாலும், வாயு பிரச்சனையினாலும் கஷ்டப்பட்ட எனக்கு சுகம் கிடைத்தது. இப்பொழுது நான் விரும்பின சாப்பாட்டை சாப்பிடுகிறேன், எனக்கு எந்த தொந்தரவும் இல்லை நன்றாக இருக்கிறேன் எனக்குசுகம் தந்த தேவாதி தேவனுக்கு ஸ்தோத்திரம்.

**சகோதரி. கௌசல்யா - கொசவபட்டி**

எனக்கு திருமணத்திற்கு முன்னே கர்ப்பபையில் நீர்கட்டி பிரச்சனை இருந்தது. திருமணம் ஆன பின்பு குழந்தைக்காக மருத்துவரிடம் பரிசோதனைக்குச் சென்றபோது கர்ப்பபையில் நீர்கட்டி இருக்கிறது அதற்கு முதலில் சிகிச்சை எடுக்க வேண்டும், சிகிச்சைக்கு நிறைய பணம் செலவாகும் என்றார்கள். நானும், என் அம்மாவும் மருத்துவரின் சொல்லை நினைத்து கலங்காமல், தேவன் மேல் நம்பிக்கை வைத்து வானத்தின் வாசல் ஜெபமையத்திற்கு வந்து உபவாச ஜெபத்தில் ஜெபித்தோம். சகோதரர் அவர்கள் கொடுத்த தேவ செய்தியின் மூலம் தேவன் என்னோடு பேசினார். இரட்டிப்பான நன்மையைத் தருவேன் இன்றைக்கே தருவேன் என்ற வார்த்தை என்னைப் பெலப்படுத்தியது. தொடர்ந்து அந்த வார்த்தையை வைத்து விசுவாசத்தோடு ஜெபித்தேன். திருமணமான 8-ஆவது மாதத்திலேயே குழந்தை பாக்கியத்தை தேவன் எனக்கு தந்தார். இரட்டிப்பான நன்மையைத் தருவேன் என்று தேவன் சொன்னபடியே இரட்டை குழந்தைகள் பிறந்தது. யாரெல்லாம் எனக்கு குழந்தை பிறக்காது என்று நினைத்தார்களோ அவர்கள் கண் முன்னே தேவன் எனக்கு ஒரே பிரசவத்தில் இரண்டு குழந்தைகளை தந்து சாட்சியாக நிறுத்தின தேவாதி தேவனுக்கு நன்றி



செம்பட்டியில்
23rd YEAR
ஸ்தோத்திர கூட்டம்
ஆயத்தமாவோம்
கடைசிகால சுவிசேஷ தரிசன கூட்டம்
மே-1
2023
திங்கள்கிழமை
(அரசு விடுமுறை)
9:30AM TO 2:00PM
Evangelist
KALA VINCENTRAJ
Prophet.
VINCENT SELVAKUMAR
Evangelist
L.VINCENTRAJ
இடம்
வானத்தின் வாசல் எழுப்புதல் ஜெப மையம்,
செம்பட்டி, திண்டுக்கல்
வந்து பாருங்கள்! இயேசு அற்புதம் செய்கிறார்!
உங்கள் யாவரையும் அன்புடன் அழைக்கிறோம்.
தொடர்புக்கு
9498000449,
0451-2910328

## சென்னையில்

# உபவாச ஜெபம்

அன்பரின் பாதத்தில் ஒரு நாள்

**மே 6**

சனிக்கிழமை

9:00Am-2:30PM

**இடம்**

BKN ஆடிட்டோரியம், 5/6, ரித்தர்டன் சாலை,
வேப்பேரி, சென்னை.

## திருச்சியில்

# பேரின்ப பெருவிழா

**மே 21,22**

ஞாயிறு திங்கள்

தினமும் மாலை
6 மணிக்கு

**இடம்**

YMCA மைதானம்,
புத்தூர், திருச்சி



# நடப்பு செய்திகள்

## பீதியை கிளப்பும் பறவை காய்ச்சல், கலங்கும் மக்கள், எப்படி பரவுகிறது தெரியுமா? விஞ்ஞானிகள் விளக்கம்.

சீனாவில் பறவைக் காய்ச்சல் பாதிப்பு காரணமாக ஒருவர் உயிரிழந்துள்ள சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இந்த சம்பவத்தையடுத்து பறவை காய்ச்சல் பீதி உலகம் முழுவதும் பரவி வருகிறது. கடந்த 2019ம் ஆண்டு சீனாவில் முதன் முதலில் கண்டுபிடிக்கப்பட்ட கொரோனா தொற்று வைரஸானது உலகம் முழுவதும் பெரும் உயிரிழப்புகளையும், பொருளாதார பாதிப்புகளையும் ஏற்படுத்தியது. புதிய காய்ச்சல் ஒன்று தற்போது மீண்டும் மனித சமூகத்தை மூச்சடைக்க செய்யும் நிலைக்கு ஆளாக்கியுள்ளது. அதாவது சீனாவில் பறவை காய்ச்சல் பாதிப்பால் 56 வயது பெண்மணி ஒருவர் உயிரிழந்துள்ளார். இதனால்தான் அச்சம் உருவாகியுள்ளது. இந்த வகை காய்ச்சல் H3N8 எனும் வைரசால் பரவுகிறது. இந்த வைரஸ் பறவைகளையும், கால்நடைகளையும் மட்டுமே தாக்கி வந்த நிலையில், முதன் முறையாக மனிதர்களை தாக்கி மரணத்தையும் ஏற்படுத்தியுள்ளது. இந்த உயிரிழப்புதான் பறவை காய்ச்சலால் ஏற்பட்ட முதல் உயிரிழப்பு என்று உலக சுகாதார மையம் கூறியுள்ளது. இது குறித்து விஞ்ஞானிகள் கூறுகையில், ‘சீனாவில் மட்டும் 3 பேர் இந்த வைரஸால் பாதிக்கப்பட்டிருந்தனர். இதில் ஒருவர் உயிரிழந்துள்ளார். பொதுவாக பறவை காய்ச்சல் மனிதர்களிடம் பரவாது. ஆனால் இது தற்போது மனிதர்களிடம் பரவியிருப்பது குறித்து நாங்கள் தீவிரமான ஆய்வை மேற்கொண்டோம். ஆய்வில் பல தகவல்கள் வெளியாகியுள்ளன. அதாவது, முதல் தொற்று பாதிப்பு கடந்த ஆண்டு ஏற்பட்டிருக்கிறது. இது முதலில் ஒரு குழந்தையைதான் பாதித்திருக்கிறது. அதன் பின்னர் மற்றொரு குழந்தையை பாதித்திருக்கிறது. இரண்டு பாதிப்புகளும் சீனாவில்தான் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் ஒரு குழந்தை தீவிரமான சுவாச கோளாறால் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டது. அவ்வாறு அனுமதிக்கப்பட்ட குழந்தையை பரிசோதித்ததில் குழந்தையின் ரத்தத்தில் H3N8 வைரஸ் பாதிப்பு இருப்பதை மருத்துவர் கண்டுபிடித்துள்ளனர். இதனையடுத்து குழந்தை தீவிர சிகிச்சை பிரிவுக்கு மாற்றப்பட்டிருக்கிறது. இந்த குழந்தை யார்? குடும்ப பின்னணி என்ன? என்பது குறித்து விசாரிக்கையில் பல அதிர்ச்சி தகவல்கள் வெளியாகியுள்ளன. அதாவது, குழந்தையின் குடும்பம் கூட்டுக்குடும்பமாகும். அவர்கள் தங்கள் தோட்டத்தில் பறவை பண்ணையை வைத்திருந்திருக்கின்றனர். அதுபோல ஏராளமான காட்டு பறவைகளும் இவர்கள் வீட்டின் தோட்டத்தில் வந்திருக்கிறது. இதன் மூலம் வைரஸ் பரவியிருக்கலாம் என்று சொல்லப்படுகிறது. அதேபோல 2022ம் ஆண்டு மே மாதம் மற்றொரு குழந்தையிடம் வைரஸ் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இக்குழந்தை கோழி பண்ணைக்கு அருகில் வசித்து வந்திருக்கிறது. தற்போது இரண்டு குழந்தைகளும் குணமடைந்துள்ளது. இதேபோல தான் குவாங்டாங் மாகாணத்தை சேர்ந்த 56 வயது பெண்மணி தீவிர நிமோனியா நோயால் பாதிக்கப்பட்டிருந்தார். அவரை பரிசோதித்ததில் அவருக்கும் H3N8 பாதிப்பு இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. மற்ற இரண்டு நோயாளிகளை போல இவரது வீட்டின் அருகே கோழி பண்ணையும், காட்டு பறவைகளும் அதிக அளவில் இருந்ததுள்ளன. இவர் மார்ச் மாதம் 3ம் தேதி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். ஆனால் சிகிச்சை பலனின்றி 16ம் தேதி உயிரிழந்தார். இதில் நாம் பயப்படாமல் இருப்பதற்கு ஒரு காரணம் இருக்கிறது. அதாவது இந்த H3N8 வைரஸ் ஒருவரிடமிருந்து மற்றொருவருக்கு பரவாது. இருப்பினும் உயிரிழந்த பெண்மணியின் இருப்பிடம் முழுவதும் கிருமி நாசினி கொண்டு சுத்தம் செய்யப்பட்டுள்ளது. இந்த காய்ச்சல் குறித்து ஏகப்பட்ட வதந்திகள் பரவி வருகின்றன. அதையெல்லாம் நம்ப வேண்டாம். இந்த வைரஸால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சில அறிகுறிகள் இருக்கும் அதை வைத்து இந்த பாதிப்பை உறுதி செய்துகொள்ளலாம். ஏ3ச8 வைரஸ் பாதிக்கப்பட்டால் சுவாச பாதிப்பு இருக்கும். மேலும் காய்ச்சலும் தீவிரமாக இருக்கும் இதுதான் இதன் அறிகுறிகள். எனவே சாதாரண காய்ச்சலுக்கு பயப்படாமல் மருத்துவ பரிசோதனை செய்து கொள்ளுங்கள்' என்று கூறியுள்ளனர்.

**ஜெபம்** H3N8 வைரஸ் நோய் பரவலை தேவன் அழிக்கவும், எல்லாரையும் தேவன் பாதுகாக்கவும் ஜெபிப்போம்.

# இயேசு வாழ்கிறார் ஊழியத்தோடு இணைந்து சுவிசேஷ ஒளியை பரவ செய்யுங்கள்

தேவன், தமது பிள்ளைகள் ஒவ்வொருவரும் தமது ஊழியத்தில் பங்கு பெறவேண்டுமென்று விரும்புகிறார்.அவரது நோக்கத்தை நிறைவேற்ற அவர் தமது பிள்ளைகளை பயன்படுத்துகிறார். நாம் வெறும் பார்வையாளராயிருப்பதை அவர் விரும்பாமல், அவரது ஊழியத்தின் பங்காளராக மாறுவதையே அவர் விரும்புகிறார்! நாம் கரையில் நிற்பதை விரும்பாமல் களத்தில் இறங்குவதையே அவர் விரும்புகிறார். அறிவிக்கப்படாத மக்களைச் சந்தித்து, சுவிசேஷத்தை கூறி, உலகை சுவிசேஷமயமாக்குகிற அந்த மகிமையான ஊழியத்தில் தமது பிள்ளைகள் ஒவ்வொருவரும் ஈடுபட வேண்டும் என அவர் விரும்புகிறார்!

விளையச் செய்கிறவர் தேவனாக இருந்தாலும், விதைக்கிற வேலையையும், நீர்ப்பாய்ச்சுகிற வேலையையும் அவர் நமது கரங்களில் ஒப்படைத்திருக்கிறார்(1கொரிந்தியர்3:7). இக்கடைசி காலத்தில், தமது சித்தத்தை நிறைவேற்றுகிற பணியில் ஈடுபடவேண்டுமென கர்த்தர் விரும்புகிறார்.

வாருங்கள்! இக்கடைசி கால எழுப்புதல் சுவிசேஷ பணியில் இணைந்து அவரது நோக்கத்தை நிறைவேற்றுகிற ஊழியத்தின் பங்காளர்களாக மாறுவோமாக!

## 1) BANK TRANSFER

| | | | |
|---|---|---|---|
| A/C NAME | : JESUS LIVES TRUST | A/C NAME | : L.VINCENT RAJ |
| BRANCH | : KOCHADAI MADURAI | BRANCH | : MADURAI |
| BANK NAME | : UNION BANK OF INDIA | BANK NAME | : AXIS BANK |
| A/C.NO | : 493902010001022 | A/C.NO | : 109010100247030 |
| IFSC CODE | : UBIN0549398 | IFSC CODE | : UTIB0001765 |

**2) இணையதளம்(WEBSITE)**
WWW.JESUSLIVES.IN

ஸ்கேன் செய்யுங்கள்

**3) காசோலை(CHEQUE)**
JESUS LIVES TRUST OR L.VINCENT RAJ

**4) GOOGLE PAY** : GPAY(GOOGLE PAY)TO , 944 300 9333 ,7598359316

**5) மணியார்டர்(E.M.O)** : இயேசு வாழ்கிறார் ஊழியங்கள் 54 ஏ.ஐ.பி.இ.ஏ நகர், ஏ - காலனி பரவை ,மதுரை - 625 402

நமது இயேசு வாழ்கிறார் ஊழியத்திற்கென்று வங்கிக் கணக்கு மூலமாகவோ, இணையதளம் மூலமாகவோ, அல்லது GOOGLE PAY மூலமாகவோ அனுப்பலாம். காணிக்கை அனுப்பியபின் அதைக் குறித்த விபரத்தை 944 28 00 449 என்கிற இந்த எண்ணில் தொடர்பு கொண்டோ, அல்லது இதே எண்ணிற்கு WHATSAPP மூலமாகவோ, accounts@jesuslives.in மூலமாகவோ எங்களுக்கு தெரியப்படுத்தவும்.